DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-53/2025

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ஆறுமுகம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present)

05.02.2026- 03.35 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் சிறைக்குளம் கிராமத்தில் குடியிருந்து கூலி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஐத் தெரியும். பட்டியல் சாட்சி 3. மாரிமுத்து, 4 வேல் ஆகியோர்களை தெரியும்.

2. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 முனியசாமி சிறைக்குளத்திலிருந்து எங்கள் வீட்டை நோக்கி ஓடி வந்தார். அ.சா.1ன் மீது ரத்தமாக இருந்தது. ஆஜர் எதிரிகள் இருவரும் விரட்டிக்கொண்டு வந்தார்கள். நானும், எங்களை ஊரைச் சேர்ந்த மாரிமுத்துவும் எதிரிகளை விலக்கிவிட்டோம். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு சம்மந்தமாக 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது எனக்கு தெரியும். அ.சா.1 ஐ யார் தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 எங்கள் வீட்டை நோக்கி வரும் போது நான் பார்த்தேன். அவர் தான் ஆஜர் எதிரிகள் சத்தம் போட்டதாக கூறினார். அ.சா.1ஐ நான் பார்க்கும் போது என்னுடன் மாரிமுத்துவும் இருந்தார். வேறு தனி நபர்கள் யாரும் இல்லை. பாக்கியராஜும், தினகரனும் அங்கு இல்லை என்றால் சரியல்ல. அசா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி உறவு முறை ஆவார். அ.சா.1 எனது தம்பி என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. அ.சா–1 ஐ யாரும் விரட்டி வரவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி